## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1)** "சம்பிரிதி **2019**" என்பது இந்தியாவுடனான எந்த நாட்டின் கூட்டு ராணுவ பயிற்சி ஆகும்?

**A]** பூட்டான்

**B]** மியான்மர்

**C]** ஈரான்

**D]** பங்களாதேஷ்

- ✓ சம்பரிதி **2019** என்பது இந்தியா - பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி ஆகும்.
- ✓ இது பங்களாதேஷின் தங்கைல் என்ற இடத்தில் கடந்த மார்ச் மாதம் **2** ஆம் தேதி முதல் **15**ம் தேதி வரை நடைபெற்றது. இது இரு நாடுகளுக்கு இடையேயான எட்டாவது கூட்டு ராணுவ பயிற்சி ஆகும். இதை இரண்டு நாடுகளும் ஓராண்டு விட்டு ஓராண்டாக தலைமை தாங்கி நடத்தி வருகிறது.
- ✓ **14** நாட்கள் ராணுவ பயிற்சியான இது இருநாட்டு ராணுவத்திற்கு இடையேயான கூட்டுறவு செயல்பாடு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் விதமாக நடத்தப்படுகிறது.
- ✓ இதில் எதிர் கிளர்ச்சி மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தேவையான பயிற்சிகளை மேற்கொள்கிறது. பயிற்சிகள் ஐநா சபையின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டே நடக்கிறது.

**2)** நைஜீரியா நாட்டின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

**A]** குட்லக் ஜோனாதன்

**B]** எமி ஒசின்பஜோ

**C]** முகமது புகாரி

**D]** இப்ராஹிம் பபன்கிடா

- ✓ **All progressives Congress (APC]** என்ற கட்சியின் உறுப்பினரான முகமது புகாரி அவர்கள் நைஜீரியாவின் பிரதமராக இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருடைய பதவிக்காலம் **4** ஆண்டுகள் ஆகும்.

- ✓ 76 வயதான புகாரி முன்னாள் துணை பிரதமரும் எதிர்க்கட்சி தலைவருமான அட்டிக்கு அபுபக்கர் என்பவரை 4 மில்லியன் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.
- ✓ போகோ ஹரம் என்ற கிளர்ச்சிப் படையின் ஆதிக்கத்தை அடக்கியதால் இவர் பாராட்டப்படுகிறார். கிளர்ச்சிப் படையினரால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் மேலும் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**3) அரசு அதிகாரிகளின் பெற்றோரை பாதுகாக்க "பிரணாம் கமிஷன்" PRANAM என்பதை நியமித்த மாநில அரசாங்கம் எது?**

A] ஒடிசா

B] அசாம்

C] நாகலாந்து

D] கோவா

- ✓ அரசு அதிகாரிகளின் பெற்றோரை பாதுகாக்க **PRANAM** கமிஷன் என்பதை அசாம் மாநில முதல் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் என்பவர் சமீபத்தில் தொடங்கினார்.
- ✓ **pranam (Parents Responsiblity and norms for accountability and monitoring)** மசோதாவின் கீழ் உரிய நேரத்தில் அரசு அதிகாரிகளின் பெற்றோரை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை இந்த கமிஷன் மேற்கொள்ளும்.
- ✓ இம்மசோதாவிற்கு மாநில கேபினட் குழு கடந்த 2018 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியது. இதன்படி மாநில அரசு அதிகாரிகள் அவர்களின் பெற்றோர்களையும் திருமணமாகாத ஊனமுற்ற வருமானம் அற்ற தன் சகோதர சகோதரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியது.
- ✓ ஒருவேலை அவர்களை பாதுகாக்க தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட அரசு அதிகாரியின் வருமானத்திலிருந்து 10 அல்லது 15 சதவீதம் அரசாங்கத்தால் பிடித்தம் செய்யப்பட்டு அப்பணம் அவர்களின் பெற்றோர்கள் அல்லது ஊனமுற்ற உடன்பிறந்தோரிடம் வழங்கப்படும்.

**4) T20- ன் வரலாற்றில் 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பந்துவீச்சாளர் யார்?**

A] லசித் மலிங்கா

B] ரஷித் கான்

C] ஜஸ்ப்ரீத் பர்மா

D] குல்தீப் யாதவ்

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி நடைபெற்ற 20-20 சர்வதேச விளையாட்டு போட்டியில் 4 பந்தில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி ஹாட்ரிக் சாதனை படைத்தார் ரஷித் கான்.
- ✓ டேராடூனில் நடைபெற்ற அயர்லாந்துக்கு எதிரான டி20 சர்வதேச விளையாட்டுப் போட்டியில் ரஷித் கானின் திறமையான பந்து வீச்சால் ஆப்கானிஸ்தான் அணியால் அயர்லாந்து அணியை 3-0 என்ற கணக்கில் வீழ்த்த முடிந்தது.
- ✓ இதன் மூலம் டி20 வரலாற்றில் ஹாட்ரிக் அடித்த ஏழாவது பந்து வீச்சாளராக கருதப்படுகிறார் அதே நேரத்தில் இரண்டாவது 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். மொத்தத்தில் இலங்கை அணியைச் சேர்ந்த லஷித் மலிங்காவிற்கு பிறகு சர்வதேச விளையாட்டு போட்டிகளில் 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது வீரராக கருதப்படுகிறார்.
- ✓ மலிங்கா இந்த வெற்றியை 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான உலக கோப்பை கிரிக்கெட்டில் படைத்தார்.

5) குரங்குகளை உயிர்க்கொல்லிகளாக (Vermin) எந்த மாநில அரசாங்கம் சமீபத்தில் அறிவித்தது?

A] திரிபுரா

B] அருணாச்சலப் பிரதேசம்

C] இமாசலப் பிரதேசம்

D] மேற்கு வங்காளம்

- ✓ இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் 11 மாவட்டங்களை சேர்ந்த 91 வட்டம் மற்றும் துணை வட்டத்தைச் சேர்ந்த குரங்குகளை உயிர்க்கொல்லிகள் (Vermin) என்று அடுத்த ஓராண்டு வரை அம்மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது.
- ✓ ஏனெனில் அக்குரங்குகள் பயிர் வகைகளுக்கும் மனிதர்களுக்கும் ஆபத்தை விளைவிப்பதால் உயிர்க்கொல்லிகளாக அறிவித்துள்ளது.
- ✓ அவ்வாறு ஆபத்தை விளைவிக்கும் குரங்குகளை அம்மாநில மக்களோ அல்லது வனத்துறை அதிகாரிகளோ கொல்வதற்கும் வேட்டையாடுவதற்கும் இடமளிக்கிறது.

- ✓ மனிதர்களுக்கு, பயிர் வகைகளுக்கு ஆபத்தை உண்டாக்கி நோய்களைப் பரப்பக்கூடிய வன விலங்குகள் பறவைகளை **(Vermin)** என்று குறிப்பிடுகின்றனர். வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் **1972**ன் படி **62** ஆவது பிரிவின் கீழ் மாநில அரசாங்கம் **Vermin** எனப்படும் ஆபத்தான விலங்கு வகைகளை பட்டியலிட்டு அதை அழிப்பதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டு விண்ணப்பிக்கலாம்.
- ✓ அட்டவணை **I** மற்றும் அட்டவணை **H**ல் உள்ள பகுதி **11**ல் பட்டியலிடப்பட்ட விலங்குகளை மத்திய அரசாங்கமே குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட பகுதியிலுள்ள விலங்குகளை **Vermin** என அறிவிக்க நாம் தெரிவிக்கலாம்.
- ✓ குறிப்பிட்ட காலம் வரை அந்த விலங்குகளை அட்டவணை **5** இன் கீழ் பட்டியலிடுவார்.

**6) 2019 ஆம் ஆண்டிற்கான "தேசிய இளைஞர் பாராளுமன்ற விழாவில் – "(National youth parliament festival)" தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதல் இடத்தை பிடித்தவர் யார்?**

**A]** ஸ்வேதா உம்ரே

**B]** எம் எஸ் அஞ்சனாட்சி

**C]** மம்தா குமாரி

**D]** நேகா அருசியா

- ✓ புதுடில்லியில் உள்ள விக்யான் பவனில் கடந்த பிப்ரவரி மாதம் **27**ஆம் தேதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேசிய இளைஞர் பாராளுமன்ற விழாவில் வெற்றிபெற்ற இளைஞர்களுக்கு விருதுகளை வழங்கினார்.
- ✓ இதில் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த ஸ்வேதா உம்ரே முதலிடத்தையும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அஞ்சனாட்சி இரண்டாவது இடத்தையும் பீகாரைச் சேர்ந்த மம்தா குமாரி மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.
- ✓ இந்த ஆண்டுக்கான விழா **NSS** மற்றும் நேரு யுவகேந்திரா சங்கதன், மத்திய இளைஞர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்துடன் இணைந்து நடத்தியது.
- ✓ **18** முதல் **25** வயதுள்ள இளைஞர்களை மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான இளைஞர் பாராளுமன்ற போட்டிகளில் கலந்து கொள்ள அழைத்திருந்தது. இவ்விழாவின் கருப்பொருள் "புதிய

winmeen.com

இந்தியாவின் குரலாய் இருங்கள்- **Be the voice of New India"** மற்றும் "கொள்கைகளுக்கான தீர்வுகளும் பங்களிப்பும்- **Find solutions and contribute to policy**" என்பதாகும்.

- ✓ புதிய இந்தியாவைப் பற்றியும் **2022** ஆம் ஆண்டிற்கு முன்னதாக நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் விவாதித்து அறிந்து கொள்ளும் தலமாக இவ்விழா அமைந்தது.

**7) "டிட்டன்வாலா அருங்காட்சியகம்" கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது? [Titanwala Museum]**

**A]** ஹரியானா

**B]** சட்டிஸ்கர்

**C]** மத்தியபிரதேசம்

**D]** ராஜஸ்தான்

- ✓ மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்களால் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பக்ரு என்னுமிடத்தில் சமீபத்தில் டிட்டன்வாலா அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. இதில் சிப்பா என்ற சமூகத்தைச் சேர்ந்த மக்களின் ஹேண்ட் பிளாக் பிரின்ட்டிங் **(Hand block printing)** எனப்படும் பிரத்தியேகமான அச்சிடும் முறை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ இந்த அருங்காட்சியகம் திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை **9** மணி முதல் மாலை **6** மணி வரை திறந்திருக்கும்.
- ✓ பக்ரு **- Hand block printing** முதல் முறையாக ராஜஸ்தானில் உள்ள சிப்பாஸ் என்னும் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பழமையான கைகளால் அச்சிடும் முறையாகும். இதில் இயற்கையான நிறங்களை மட்டுமே பயன்படுத்துவர்.
- ✓ இண்டிகோ அல்லது டபு **(tabu)** எனப்படும் செடி மற்றும் காய்கறிகளில் இருந்து கிடைக்கும் வர்ணத்தையும் ஹர்தா (மஞ்சள்) நிற சாயத்தையும் பயன்படுத்துவர். இதனை அதிக திறனுள்ளவர் மட்டுமே அச்சிட இயலும்.
- ✓ இந்த முறை அச்சிடுதலுக்கு தேக்குமர கட்டைகளை ஒரு நாள் இரவு முழுக்க எண்ணெயில் ஊறவைத்து, மறுநாள் அதை சுத்தமாக கழுவி அதன் மேல் அச்சிடுவர். சிப்பா மக்கள் இந்த அச்சு ஓவியங்களை பாரம்பரிய சொத்தாக கருதி பாதுகாத்து வந்தனர்.

- ✓ துணிகளில் அச்சிடுவதற்கு முன்பாக களிமண் மற்றும் பிற ரசாயன பொருட்களுடன் கலந்த கலவையில் துணிகளை ஊற வைத்து, மென்மையாக்கி, காய வைத்தப் பின்னர் அச்சிட்டனர்.
- ✓ பின்னர் துணிகளை வெயிலில் காயவைத்து சிறந்த படைப்புகளை தந்தனர். ஆத் கலியா, சப்பட் மற்றும் கமல் போன்றவைகளே இவர்களின் அச்சிடும் கருப்பொருளாக இருந்தது.

**8) 2019 ஆம் ஆண்டிற்கான உலக சமூகநீதி நாளின் ( World day of social justice) கருப்பொருள் என்ன?**

A] மோதலைத் தடுத்தல் மற்றும் சிறந்த வேலைகளின் மூலம் சமாதானத்தை நிலை நிறுத்துதல். **(Preventing conflict and sustaining peace through decent work)**

B] வறுமை ஒழித்தல் மற்றும் உலகளாவிய நீதியை மேம்படுத்துதல். **(Promote global justice & poverty eradication)**

**C] நீ சமாதானத்தையும் நீதியையும் விரும்பினால் சமூக நீதியை நிலைநாட்டு. (If you want peace and development, work for social justice)**

D] சுற்றுச்சூழல் சார்ந்த நிலையான பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தை நோக்கிய ஒரு மாற்றம். **(A Just Transition – environmentally sustainable economies and societies)**

- ✓ உலக சமூக நீதி நாள் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் **20**ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.
- ✓ உலகளாவிய வறுமை, வேலைவாய்ப்பின்மை, ஒதுக்கிவைத்தல் போன்றவைகளுக்கு எதிராக போராட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் சமூகநீதியை உலக அளவில் நிலைநிறுத்த சபதம் ஏற்று உள்ளது.
- ✓ **2019** ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "நீ சமாதானத்தையும் நீதியையும் விரும்பினால் சமூக நீதியை நிலைநாட்டு" என்பதாகும்.

**9) இந்தியாவின் எந்த செமிகண்டக்டர் தயாரிக்கும் நிறுவனம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் Semiconductor chips for 4G/LTE and 5G NR modems அறிமுகப்படுத்தியது?**

**A] Signal chips**

B] Ineda systems

C] Saankhya labs

D] Terminus circuits

- ✓ பெங்களூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் செமிகண்டக்டர் தயாரிக்கும் கம்பெனியான **Signal chips** இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **Semiconductor chips for 4G/LTE and 5G NR modems** புதுடில்லியில் அறிமுகப்படுத்தியது.
- ✓ **SCBM34XX** மற்றும் **SCRF34XX/45XX** என்ற வரிசைகளை உடைய சில்லுகளும் "ஆகும்பே" என பெயர் கொண்ட குறியீடுகளும் **Signal chips** நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர்களின் **8** ஆண்டு கடும் ஆராய்ச்சிகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்டதாகும்.
- ✓ **RF** பிரிவுகள் **LTE/5G-NR** பட்டைகளால் **6GHz** வரை சூழப்பட்டிருக்கும்.
- ✓ இதன் மூலம் இந்தியாவின் **NAVIAC** எனப்படும் செயற்கைக்கோள் மூலம் வழி அறிய உதவும் கருவியை கட்டுப்படுத்த இயலும்.
- ✓ **SCRF1401** என்ற வரிசைகளில் ஆகும்பே குறியீடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முதல் **RF transceiver** சில்லுகள் இதே நிறுவனத்தால் கடந்த **2015** ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- ✓ இதன் மூலம் மேம்பட்ட கணினி செயல்பாடுகளான **RAN/CRAN** எளிதாக இயக்க இயலும். மேலும் பல புதிய வடிவமைப்புக்கும் இந்த **5G NR** அம்சங்கள் பெரிதும் பயன்படுகின்றது.

**10) T-20** சர்வதேச கிரிக்கெட் போட்டியில் எந்த நாடு ஒரே போட்டியில் அதிக ரன்கள் சேர்த்த அணி என்ற சாதனையை படைத்துள்ளது?

**A]** ஆப்கானிஸ்தான்

**B]** இந்தியா

**C]** ஆஸ்திரேலியா

**D]** இங்கிலாந்து

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் **23**ஆம் தேதி உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள டேராடூன் ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெற்ற **20-20** சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி ஒரே போட்டியில் அதிக ரன்கள் சேர்த்த அணி என்ற சாதனையை படைத்து முதல் இடத்தில் உள்ளது.
- ✓ அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது போட்டியில், **20** ஓவர்களில் **278** ரன்கள் பெற்றனர். இதில் ஆப்கான் மட்டைப்பந்தாளரான ஹஸ்ரதுல்லா ஸஸாய் இரண்டாவது அதிக ரன்கள் எடுத்தார். இவர் **62** பந்துகளில் **162** ரன்கள் குவித்துள்ளார். இதற்க்கு முன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஆரோன் பின்ச் **172** ரன்களை பெற்று முதல் இடத்தில் இருந்தார்.

- ✓ மேலும் ஹஸ்ரதுல்லா ஸஸாய் **16** சிக்சர்களையும், **usman ghani** உடனான முதல் விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து **236** ரன்கள் சேர்த்தனர். இவருடைய சிறந்த ஆட்டத்தால் ஆஸ்திரேலியாவின் முந்தைய சாதனையான **263/3** முறியடிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய அணியினர் **2016**ஆம் ஆண்டு இலங்கை அணியின் சாதனையை முறியடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

winmeen.com